J3/4551/18

<u>சுருக்கம்</u>

பள்ளிக் கல்வி – 2011–12 ஆம் ஆண்டில் அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதலாக ஒப்பளிக்கப்பட்ட 1,590 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதலாக ஒப்பளிக்கப்பட்ட 6,872 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஆக மொத்தம் 8,462 தற்காலிக பணியிடங்கள் – 01.01.2018 முதல் 31.12.2018 வரை தொடர் நீட்டிப்பு வழங்குதல் – ஆணை– வெளியிடப்படுகிறது.

---

<u>பள்ளிக் கல்வி [பக5(1)]த்துறை</u>

அரசாணை (1டி) எண். 206

நாள்:06.04.2018
(திருவள்ளுவராண்டு 2049, பங்குனி 23)

பள்ளிக்கல்வி இயக்குநர் அலுவலகம் 04 MAY 2018 சென்னை-600 006

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண்.212, பள்ளிக் கல்வி(வ.செ.2)துறை, நாள்: 23.12.2011.
2. அரசாணை (நிலை) எண்.50, பள்ளிக் கல்வி (வ.செ.2) துறை, நாள்: 05.03.2012.
3. அரசாணை (நிலை) எண்.229, பள்ளிக் கல்வி (வ.செ.2 ) துறை, நாள் 04.09.2012.
4. அரசாணை(1டி) எண்.287, பள்ளிக் கல்வி (பக5) துறை, நாள்:03.05.2017.
5. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க. எண்.085225/ எல்/ இ3/2017, நாள் 29.12.2017 மற்றும் 09.03.2018.

----

<u>ஆணை:–</u>

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 2011–12 ஆம் ஆண்டில் அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளுக்கு 1590 முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு 6752 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தில் சேர்த்து மைய அரசின் ஒப்புதல் பெறுவதை எதிர்நோக்கி கூடுதலாக 120 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட்டன. மேலே இரண்டு மற்றும் மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணைகளில், அரசு / நகராட்சி உயர்நிலை / மேல்நிலை பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு 1 : 40 என்ற ஆசிரியர் : மாணவர் விகிதாச்சாரப்படி கூடுதலாக தோற்றுவிக்கப்பட்ட முறையே 1,590 முதுகலை பட்டதாரி ஆசிரியர் மற்றும் 6,872 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கான பாட வாரியாக அனுமதிக்கப்பட்ட பள்ளிகளின் பட்டியலுக்கு ஒப்புதல் வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

2. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மேற்காண் 1590 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதலாக ஒப்பளிக்கப்பட்ட 6752 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தில் சேர்த்து மைய அரசின் ஒப்புதல் பெறுவதை எதிர்நோக்கி ஒப்பளிக்கப்பட்ட 120 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஆக மொத்தம் 8,462 தற்காலிக பணியிடங்களுக்கு கடைசியாக 01.01.2017 முதல் 31.12.2017 வரை தற்காலிக தொடர்நீட்டிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், மேற்காண் பணியிடங்களுக்கான தற்காலிக நீட்டிப்பு 31.12.2017 உடன் முடிவடைந்துள்ளதால், இப்பணியிடங்களுக்கு 01.01.2018 முதல் மேலும் ஓராண்டிற்கு தொடர்நீட்டிப்பு வழங்குமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

4. பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, அரசாணை (நிலை) எண். 212, பள்ளிக் கல்வித் துறை, நாள்: 23.12.2011–ன்படி, 2011–12ஆம் கல்வியாண்டில் அரசு / நகராட்சி மேல்நிலை பள்ளிகளுக்கு கூடுதலாக ஒப்பளிக்கப்பட்ட 1,590 முதுகலை பட்டதாரி ஆசிரியர் (புதிய ஊதிய விகிதம்: நிலை–18, ரூ.36,900 – 1,16,600) பணியிடங்கள் மற்றும் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதலாக ஒப்பளிக்கப்பட்ட 6,872 (6752+120) பட்டதாரி ஆசிரியர் (புதிய ஊதிய விகிதம்: நிலை–16, ரூ.36,400 – 1,15,700) பணியிடங்கள் என மொத்தம் 8,462 தற்காலிக பணியிடங்களுக்கு (இவ்வாணையின் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) 01.01.2018 முதல் 31.12.2018 வரை அல்லது தற்காலிக பணியிடங்களுக்கான தேவை குறித்து நிதித் துறையின் மறு ஆய்வில் முடிவெடுக்கும் வரை இதில் எது முந்தையதோ அதுவரை தொடர்நீட்டிப்பு செய்து ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் பணியிட நீட்டிப்பு வழங்கப்படும் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கான செலவினம் கீழ்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

> 2202 பொதுக்கல்வி – 02 இடைநிலைக்கல்வி – 109 – அரசு இடைநிலைப்பள்ளிகள் – மாநிலச் செலவினங்கள் – BC அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கூடுதல் பணியிடங்களை ஏற்படுத்துதல் – 01 சம்பளங்கள்.
> (த.தொ.கு. 2202 02 109 BC 0103)

மேற்காண் கணக்கு தலைப்பில் பற்று வைக்கப்படும் செலவினத் தொகையை அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்ட நிதியிலிருந்து மீளப் பெற்று கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின்கீழ் வரவு வைக்கப்பட வேண்டுமென பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அறிவுறுத்தப்படுகிறது:–

> "0202 கல்வி, போட்டி விளையாட்டுகள் கலையும் பண்பாடும் – 01 பொதுக்கல்வி – 102 இடைநிலைக் கல்வி – AL அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் ஏற்படும் செலவுகளை ஈடு செய்தல்".
> (த.தொ.கு. 0202 01 102 AL 0003)

6. மேலே பத்தி 4–ல் பணியிட நீட்டிப்பு வழங்கப்பட்ட முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கான செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்புகளின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

(i) <u>அரசு மேல்நிலைப் பள்ளிகள் :–</u>
2202 பொதுக்கல்வி – 02 இடைநிலைக்கல்வி – 109 – அரசு இடைநிலைப் பள்ளிகள் – மாநிலச் செலவினங்கள் – AA –அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களின் சம்பளங்கள்–01 – சம்பளங்கள். (த.தொ.கு 2202 02 109 AA 0108).

(ii) <u>நகராட்சி மேல்நிலைப் பள்ளிகள் :–</u>
2202 பொதுக்கல்வி – 02 இடைநிலைக்கல்வி – 109 – அரசு இடைநிலைப்பள்ளிகள் – மாநிலச் செலவினங்கள் – AB –நகராட்சி மற்றும் மாநகராட்சி இடைநிலை / மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளங்கள் 01 – சம்பளங்கள். (த.தொ.கு. 2202 02 109 AB 0106)

6. இவ்வாணை, நிதித்துறையின் அ.சா.எண்.13924/கல்வி–II/2018,நாள்:03.04.2018ல் பெற்ற அத்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

<u>பெறுநர்</u>
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை – 6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை – 6.
திட்ட இயக்குநர்,
அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டம், சென்னை – 6.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
மாநிலக் கணக்காயர், சென்னை –18/35

<u>நகல்</u>
நிதித் (கல்வி-II)/(வ.செ.பொ.I&II) துறை, சென்னை – 6.
திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை – 6.
பள்ளிக் கல்வி (அ.ந.மு.)துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

6/4/18

அரசு சார்புச் செயலாளர்

# இணைப்பு

**(அரசாணை (1டி) எண். 206, பள்ளிக்கல்வித்[பக5(1)]துறை, நாள். 06.04.2018.)**

**2011–12 ஆம் ஆண்டில் அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட கூடுதல் முதுகலை பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் மற்றும் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதிக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் விவரம்.**

| வ. எண் | பணியிட விவரம் | ஊதிய விகிதம் | பணியிடங்களின் எண்ணிக்கை | பணியிடங்கள் தோற்றுவிக்கப் பட்ட அரசாணை | பாடவாரியான/ பள்ளிவாரியான பெயர் பட்டியல் வெளியிடப்பட்ட அரசாணை | கடைசியாக தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்ட அரசாணை மற்றும் காலம் | தற்போது தொடர் நீட்டிப்பு வழங்கப்படும் காலம். |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | பட்டதாரி ஆசிரியர் | (பழைய ஊதிய விகிதம்: ரூ.9,300–34,800+4,600 தரஊதியம்) | 6,752 | அரசாணை (நிலை) எண்.212, பள்ளிக்கல்வித் துறை, நாள்.23.12.2011. | அரசாணை (நிலை) எண்.229, பள்ளிக்கல்வி துறை, நாள்.04.09.2012. | அரசாணை (நிலை) எண்.287, பள்ளிக்கல்வி துறை, நாள்.03.05.2017. (01.01.2017 முதல் 31.12.2017 வரை) | **01.01.2018 முதல் 31.12.2018 வரை.** |
| | | (புதிய ஊதிய விகிதம்: நிலை–16, ரூ.36,400 – 1,15,700/–) | 120 | | | | |
| 3. - | முதுகலை பட்டதாரி ஆசிரியர் | (பழைய ஊதிய விகிதம்: ரூ.9,300–34,800+4,800 தரஊதியம்) (புதிய ஊதிய விகிதம்: நிலை18, ரூ.36,900 – 1,16,600/–) | 1,590 | | அரசாணை (நிலை) எண்.50, பள்ளிக்கல்வி துறை, நாள்.05.03.2012. | | |
| **மொத்தம்** | | | **8,462** | | | | |

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்